# DIOCESAN CIRCULAR LETTERS

No. C-24/2025 04.12.2025

## யூபிலி நிறைவுக் கொண்டாட்ட விழா

அன்பு அருள்பணியாளர்களே, துறவியரே, பொதுநிலை இறைமக்களே!

திருவருகைக் கால வாழ்த்துகளையும் எதிர்நோக்கியிருக்கும் கிறிஸ்து பிறப்பின் மகிழ்வும் அமைதியும் உங்கள் அனைவருக்கும் உரித்தாக்குக!

நம் நினைவில் வாழும் திருத்தந்தை பிரான்சிஸ் கிறிஸ்து பிறப்பின் 2025ம் ஆண்டை யூபிலி ஆண்டாகக் கொண்டாட அழைப்பு விடுத்ததை நாம் அறிவோம். அதனை '**எதிர்நோக்கின் திருப்பயணிகள்**' எனும் கருப்பொருளில் சிந்தித்து பயணிக்க அறிவுறுத்தியிருந்தார். டிசம்பர் 24, 2024ம் ஆண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் யூபிலி ஆண்டின் நிகழ்வை, புனித பேதுரு பேராலயத்தின் புனித கதவைத் திறந்து துவக்கி வைத்ததையும், டிசம்பர் 29, 2024ஆண்டில் உலகத்தின் அனைத்து மறைமாவட்டப் பேராலயங்களிலும் யூபிலி ஆண்டின் தொடக்க நிகழ்வு நடைபெற்றதையும், நமது மறைமாவட்டத்தில் எனது தலைமையில் டிசம்பர் 29ம் நாள், 2024ல் யூபிலி ஆண்டின் தொடக்கா விழாத் திருப்பலி புனித சவேரியார் பேரலாயத்தில் வைத்து நடைபெற்றதையும் நினைவில் வைத்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன். யூபிலி ஆண்டை முன்னிட்டு நமது மறைமாவட்டத்தில் கடந்த ஓராண்டாக வெகுச் சிறப்பாக பல்வேறு திருத்தூதுக் கழகங்கள், பணிக்குழுக்கள் யூபிலி ஆண்டின் சிந்தனைகளை உள்வாங்கி, சிறப்புச் செயல்பாடுகளை முன்னெடுத்து நிறைவேற்றினார்கள். பிறரன்புச் செயல்கள் உட்பட பல்வேறு கருத்தமர்வுகள், பயிற்சிகள் பல மட்டங்களில் நடைபெற்றன. யூபிலியை மையப்படுத்தி திருவிழா மையச்சிந்தனைகளும் தேர்வு செய்யப்பட்டு, யூபிலி ஆண்டின் சிந்தனைகள் பரவலாக்கப்பட்டன.

இச்செயல்களை முன்னெடுத்த அனைவரையும் மனமாரப் பாராட்டுகின்றேன். இவ்வேளையில் கடந்த ஓராண்டாக உலகளாவிய திருஅவையோடு இணைந்து கொண்டாடிய யூபிலி ஆண்டு நிறைவுக்கு வருகின்றது. மறைமாவட்ட பேராலயங்களில் மட்டுமே நிறைவுக் கொண்டாட்ட விழா நடைபெற வேண்டுமென்று திருஅவை அறிவுறுத்தியுள்ளது. ஆகவே, எனது தலைமையில் டிசம்பர் மாதம் 28ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, திருக்குடும்ப விழா நாளன்று மாலை 05.00 மணிக்குப் புனித சவேரியார் பேரலாயத்தில் வைத்து நிறைவுக் கொண்டாட்ட விழா நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நீங்கள் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்க அன்பாய் அழைக்கின்றேன்.

யூபிலி ஆண்டின் நிறைவை முன்னிட்டு, நமது மறைமாவட்டத்தில் யூபிலி ஆண்டின் சிறப்புத் திட்டமாக “ஏழைக் கைம்பெண்கள் நல நிதி” உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். ஏராளமாய், தாராளமாய் நலிந்தோர் நலத் திட்டத்தை ஆதரிக்க அன்பாய் வேண்டுகின்றேன்.

இறைஅமைதி உங்களோடு இருப்பதாக!

***கிறிஸ்துவின் மனநிலையில்,***

Sd/-

**ஆயர் நசரேன் சூசை**

(கோட்டாறு மறைமாவட்டம்)

---

**குறிப்பு** : இச்சுற்றுமடல் **21.12.2025, ஞாயிறன்று** அனைத்து ஆலயங்களிலும் அறிவிப்பின் போது வாசிக்கப்பட வேண்டும்.

---

.

,

,